**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 11 /2022 PW .7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பீட்டர் அலங்கார தம்புராஜ் | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : சார்பு ஆய்வாளர் (ஒய்வு) |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of25.03.2026

---

**(எதிரி ஆஜர்)**

**25.03.2026 முதல் விசாரணை:**

1. நான் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பரமக்குடியில் வசிக்கிறேன் . கடந்த 17.01.2022 ம் தேதி எஸ் .எஸ். கோட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நான் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலைத்தில் ஆஜராகி ரகுபதி மனைவி ஐஸ்வர்யா என்பவர் கொடுத்த புகாருக்கு வழங்கிய நிலையம் மனு எண் 4/2021 பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 5/2021 இதச பிரிவு 341,354,323 மற்றும் 4 of TNPWH Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் . ( **மேற்படிமுதல் தகவல் அறிக்கை அ .த.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 17.30 மணிக்கு சம்பவ இடமான நைனாபட்டி கிராமத்திலுள்ள கொம்புகிராதி கண்மாய்க்கு அருகே உள்ள மண்பாதைக்கு சென்று சாட்சிகள் அழகம்மாள், சேக்கம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை யிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன் . ( **அந்த பார்வை மகஜர் அ .த.சா.ஆ–6 மற்றும் மாதிரி வரைபடம் அ .த.சா.ஆ–7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் சாட்சிகள் ஐஸ்வர்யா , ரேவதி, பாரதி கண்ணன் , இராமாயி, அழகம்மாள், சேக்கம்மாள், மருத்துவர் சுரேஷ் குமார் , மருத்துவர் சாத்தையா ஆகியோர்களை தனித்தனியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து , காயச்சான்று பெற்றேன் . இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்குகோப்பை சார்பு ஆய்வாளர் நடராஜன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4. புகாரில் தேதி வழக்கிற்காக திருத்தப்பட்டது என்றால் சரியல்ல .17.01.2021 ம் தேதி 17.30 மணிக்கு நைனார் பட்டியில் வைத்து விசாரித்தேன் . அ.சா.1 யை சொன்ன தேதியில் ,

சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல . அ.சா.1 16.01.2021ம் தேதியிலிருந்தே மருத்துவ சிகிச்சையில் இருந்ததார் என்றால் சரியல்ல . அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று மனு இரசீது தாக்கல் செய்த காவலரை நான் விசாரிக்கவில்லை . அ.சா.1 கொடுத்த புகாரில் 16.01.2021ம் தேதி சனிக்கிழமை நான் எனது தோட்டத்திற்கு மாட்டை கட்டுவதற்காக சென்று திரும்பி வரும் வழியில் எதிரி தடுப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகாரில் எத்தனை மணிக்கு , எந்த இடத்தில் சம்பவம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. முதல் தகவல் அறிக்கையில் நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . அ.சா.1 கொடுத்த புகாரை பெற்று 17.30 மணிக்கு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அ.சா. 1 புகாரில் சம்பவ இடமே சொல்லாத நிலையில் எதனடிப்படையில் சம்பவம் இடம் சென்று மேற்படி ஆவணங்களை தயார் செய்தேன் என்றால் வாதிகளை விசாரித்து சம்பவம் இடம் பற்றி அறிந்து தயார் செய்தேன் . நான் வாதியை விசாரிக்கவில்லை என்றாலும் , வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. புகாரை பெற்று , மனு இரசீதை தாக்கல் செய்த பின்னர் விசாரித்து வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரின் தன்மைகேற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.1 யை விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை நான் பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

7. அ.சா.1க்கு வெளிகாயங்கள் , உள்காயங்கள் இல்லை என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான் . இந்த வழக்கில் சாட்சிகள் ரேவதி , பாரதி கண்ணன் , இராமாயி ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான் . நைனார் பட்டியில் சுமார் 50 குடும்பத்தினர் வசிக்கிறார் என்றால் சரிதான் . இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை தனியாா விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . எனது விசாரணையில் எதிரிக்கும் , அ.சா.1 க்கும் குடும்ப பிரச்சனை இருந்தது தெரிந்து கொண்டேன் . சம்பவ இடத்தில் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை. நான் சொல்வது போல் சம்பவ நடபெற வில்லை என்றாலும் , அ.சா.1 க்கும், எதிரிக்கும் உள்ள முன்பகை வைத்து பொய்யாக கொடுத்த புகாரை பெற்று சரிவர புலன்விசாரணை செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.